மங்கள வைபவங்களுக்
கேற்ப, உடுபுடைவைகள்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூ 2.50

★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ கெவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்
மற்றும் சகலவிதமான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர் 4 விபவ ஞூ மாசி மீ 27 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஷஃபா பிறை 01 (10-03-1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 81

# தேசியக் கூட்டமைப்பு நிறுவுமாறு வலியுறுத்து

## நாடாளுமன்ற முதல் அமர்வில் ஜனாதிபதி பிரேமா பேச்சு

கொழும்பு, மார்ச், 10

**சகல சமூகங்களும் ஐக்கியப்படுவதற்கு தேசியக் கூட்டமைப்பு ஒன்று நிறுவப்படுவது மிக அவசியம் என்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச வலியுறுத்தினார்.**

**சட்ட ஆட்சி முறை மீறப்படுவதை நான் விரும்பவில்லை.**

**மக்களின் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்பதை ஜனநாயக விரோத முறைகளைக் கையாளுவோர் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் சொன்னார்.**

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வின் போது அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையை, ஜனாதிபதி பிரேமதாச நேற்று ஆற்றினார்.

புதிய எம். பிக்கள் மத்தியில் அவர் ஆற்றிய உரையின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

சகல சமூகங்களும் ஐக்கியப்படுவதற்கு தேசியக் கூட்டமைப்பு ஒன்று அவசியம் தேவை.

அடிப்படை மனித உரிமைகளோ சட்டஆட்சி முறையோ மீறப்படுவதை நான் விரும்பவில்லை.

அரசியல், பொருளாதார, சமூக நிர்வாகத் துறைகளை மீளமைப்புச் செய்யும் வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

பிளவுகளை ஏற்படுத்தும் சக்திகளை நிராகரித்து ஒரே குடையின் கீழ் மக்களை நாம் ஐக்கியப்படுத்த வேண்டும்.

### அழைப்புகள்

அரசுக்கு விரோதமாக நடந்து கொள்பவர்களை நாட்டின் சமூக, அரசியல் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு அடிக்கடி நான் அழைப்பு விடுத்து வந்துள்ளேன்.

அவசரகாலச் சட்டத்தை நீக்கி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த சிலரை விடுவித்ததன் நோக்கம் பரஸ்பர நல்லெண்ணமும் நம்பிக்கையும் ஏற்படுவதற்கான ஒரு சூழ்நிலை உருவாகுவதற்கே ஆகும்.

மக்கள் அனைவருக்கும் நீதியும் நியாயமும் கிடைக்க உத்தரவாதமளிக்கப்பட்டிருக்கிறது.

### அரசியல் யாப்பு

எமது அரசியல் யாப்பு பாதுகாக்கப்பட வேண்டும். அத்துடன் பிரசைகளின் அடிப்படை உரிமைகளும் சுதந்திரமும் பேணப்பட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எம். எச். முகம்மது புதிய சபாநாயகராக தெரிவு

கொழும்பு, மார்ச் 10

நாடாளுமன்றத்தின் புதிய சபாநாயகராக அல்ஹாஜ் எம். எச். முகம்மது 44 அதிகப்படி வாக்குகளால் நேற்றுத் தெரிவு செய்யப்பட்டார்.

பிரதமர் டி. பி. விஜேதுங்க ஜனாப். முகம்மதுவின் பெயரைப் பிரேரித்தார். அமைச்சர் நந்தா மத்தியூ வழிமொழிந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. அமிர்தலிங்கம், சுதந்திரக்கட்சி எம். பி., கே. பி. இரத்னாயகாவின் பெயரை பிரேரித்தார். மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன ஆமோதித்தார்.

ஜனாப் முகம்மதுக்கு 125 வாக்குகளும். திரு. இரத்னாயக்காவிற்கு 81 வாக்குகளும் கிடைத்தன.

அதன்பின்னர் சபாநாயகர் பொறுப்பை ஜனாப் முகம்மது ஏற்றுக்கொண்டார்.

புதிய சபாநாயகரைப் பாராட்டி பிரதமர், எதிர்க்கட்சித்தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்கா, திரு. அமிர்தலிங்கம், திரு. அதாவுட செனவிரத்ன, திரு. ஸ்டான்லி திலகரத்ன ஆகியோர் பேசினர்.

சபாநாயகர் முகம்மது நன்றி சொன்னார். (உ-எ)

## காமினி பொன்சேகா உப-சபாநாயகரானார்

புதிய உப சபாநாயகராக திரு. காமினி பொன்சேகாவும் கமிட்டிகள் உப தலைவராக திரு. ஆரிய ரெக்காவும் அதிகப்படி வாக்குகளால் நேற்று தெரிவு செய்யப்பட்டனர்.

திரு. காமினி பொன்சேகா தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட ஜனாப். எஸ். எச். எம். அபூபக்கரை விட 43 அதிகப்படி வாக்குகளைப் பெற்றார்.

திரு. ஆரிய ரெக்கா தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட திரு. க. யோகசங்கரியை விட 45 வாக்குகள் அதிகமாகப் பெற்றார். (உ-எ)

## எதிர்க்கட்சித் தலைவியாக சிறிமாவோ தெரிவானார்

கொழும்பு, மார்ச் 10

எதிர்க்கட்சித் தலைவராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவை சபாநாயகர் அல்ஹாஜ் முஹம்மது நேற்று ஏற்றுக்கொண்டார்.

### சுபநேரம்

10 - 03 - 1989

மாசி- 27 வெள்ளிக்கிழமை

சுபநேரம்:

06 - 24 முதல் 07 - 54 வரை

ராகுகாலம்:

10 -54 முதல் 03 - 24 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## 4 ஆயிரம் ஆங்கில ஆசிரியர் மாத இறுதிக்குள் நியமனம்

கொழும்பு, மார்ச் 10

இம்மாத இறுதிக்குள் மேலும் 4 ஆயிரம் ஆங்கில ஆசிரியர்கள் புதிதாக நியமனம் பெறவுள்ளனர்.

போட்டிப் பரீட்சையில் வெற்றி ஈட்டியவர்களுக்கு மட்டுமே நியமனம் வழங்கப்படும் என்றும்-

பரீட்சையின் பெறுபேறுகள் கிடைத்தவுடன் நியமனக்கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும் என்றும் கல்விச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் திரு. எச். எம். எச். ஆரியரட்ன தெரிவித்தார்.

கடந்த ஜனவரியில் நடந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தென்பகுதியில் ஜே.வி.பியினர் நேற்று எதிர்ப்பு நடவடிக்கை

### பஸ் மீது குண்டு வீச்சு; சாரதி சுட்டுக் கொலை!

கொழும்பு, மார்ச் 10

தென்பகுதியில் நேற்றுப் பரவலாக வன்செயல்கள் இடம் பெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பியினரின் ஹர்த்தால் கோரிக்கையை மீறிய தால் சில அசம்பாவிதங்கள் நடைபெற்றுள்ளன.

புதிய நாடாளுமன்றத்தின் முதல் கூட்ட அமர்வு நேற்றைய தினம் என்பதும்.

இத்தினத்தை ஹர்த்தால் அனுஷ்டித்து பகிஷ்கரிக்கும் படிஜே.வி.பியினர் கோரிக்கை விடுத்திருந்தனர் என்பதும் தெரிந்ததே.

கண்டியில் நேற்றுக் காலை போக்குவரத்துச் சபை பஸ் சாரதி ஒருவர் பஸ்ஸிலிருந்து வெளியே இழுத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதே வேளையில் நேற்று மாத்தறைக்கும் தங்காலைக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றின் மீது குண்டு வீசியதால் இரண்டு பிரயாணிகள் காயமடைந்தனர்.

குருநாகலில் தனியாருக்குச் சொந்தமான இரு லொறிகள் நேற்று எரிக்கப்பட்டன,

பதுளை, மாத்தறை ஆகிய பகுதிகளில் நேற்று கடைகளும் பாடசாலைகளும் மூடப்பட்டிருந்தன.

இந்தப்பகுதிகளில் கடமையில் இருந்த பாதுகாப்பு படையினர் பின்னர் கடைகளைத் திறக்கச் செய்ததாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 9 ஆவது நாடாளுமன்றம் நேற்றுக் கூடியது!

கொழும்பு, மார்ச் 10

இலங்கையின் ஒன்பதாவது நாடாளுமன்றம் நேற்றுக் காலை கோட்டை ஜெயவர்த்தனபுரவிலுள்ள நாடாளுமன்றக் கட்டடத்தில் சம்பிரதாய பூர்வமாகக் கூடியது.

நேற்றைய கூட்டத்தில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவும் கலந்துகொண்டார். அவர் அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையை அங்கு நிகழ்த்தினார்.

சபாநாயகர், உபசபாநாயகர் தெரிவுகளும் நேற்று நடைபெற்றன.

ஈரோஸின் சுயேச்சைக் குழுவின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற எம். பிக்கள் தவிர ஏனைய எம். பிக்கள் அனைவரும் நேற்றைய கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

சபாநாயகர் தெரிவை அடுத்து புதிய சபாநாயகரைப் பாராட்டி உரைகள் நிகழ்த்தப்பட்டன.

இவ்வுரையின்போது தமிழர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டு நடவடிக்கையா? பொய் என்கிறது இந்தியா

புதுடில்லி, மார்ச் 10

இலங்கை அரசுப் படையுடன் சேர்ந்து இந்தியஅமைதிப்படை வடக்கு - கிழக்குத் தமிழ்ப்பகுதிகளில் இராணுவ நடவடிக்கையில்ஈடுபடவில்லை என்று இந்திய அரசு அறிவித்திருக்கிறது.

அப்படி ஈடுபடுவதாகவெளியான செய்தி பொய்யானது என்று புதுடில்லியில் அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை அரசுப் படைகளுடன் சேர்ந்து இந்திய அமைதிப்படை முன்வரும் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடவில்லை; வருங்காலத்திலும் ஈடுபடக்கூடிய சாத்தியக் கூறுகள் கிடையா.

-இப்படி அந்த அதிகாரி மேலும் சொன்னார். (உ-எ)

## இந்தியப் படையை திருப்பியனுப்ப என்ன செய்ய வேண்டும்?

### ஜனாதிபதி பிரேமா எதிர்க்கட்சித் தலைவிக்கு விளக்கம்

கொழும்பு, மார்ச் 10

கட்சி அரசியலுக்கு அப்பால் நாம் செயற்பட்டால் இந்திய அமைதிப்படை தாயகம் திரும்புவதை விரைவுபடுத்த முடியும்.

—இப்படி ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் கடிதத்திற்கு எழுதிய பதில் கடிதத்திலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அரசியல் வேற்றுமைகளை மறந்து நாட்டின் நலன்கருதி நாம் செயல்படவேண்டும்.

நாட்டின் பாதுகாப்புப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நாம் இப்படிச் செயற்பட வேண்டியது அவசியம்.

சிங்கள மக்களுக்கு பாதுகாப்பு வழங்குவது குறித்த பிரச்சினையில் நான் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுடன் தர்க்கப்பட விரும்பவில்லை.

சிங்கள மக்கள் படுகொலை செய்யப்படுவது எங்கள் அனைவருக்கும் கவலை தரும் சம்பவமாகும்.

இது, ஜனநாயக நடைமுறைகளில் நம்பிக்கை வைத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சொத்துகள் பற்றி தகவல் வெளியிட திகதி நிர்ணயம்

கொழும்பு, மார்ச் 10

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னர் எம்.பிக்கள் தங்கள் சொத்துக்கள், உடைமைகள் பற்றிய விவரங்களை வெளியிட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளனர். (ஒ-எ)

## வங்கிகளில் இன்றும் நாளையும் நிவாரணக் கொடுப்பனவு இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ் மாவட்ட இலங்கை வங்கி, மக்கள்வங்கிக் கிளைகளினால் இன்றும் நாளையும் வழங்கப்பட இருந்த நிவாரணக் கொடுப்பனவுகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் வழங்க முடியாதுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது,

இதற்கான புதிய திகதி மற்றும் விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்று வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-10)

## இளைஞர் சடலம்

சுன்னாகம் கொத்தியாலடி மயானத்துக்குச் சமீபமாக நேற்று இளைஞர் ஒருவரின் சடலம் கிடக்கக் காணப்பட்டது.

உடலில் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஒ-10)

## பண்ணைப் பாலத்தடியில் ஸ்ரீலங்கா பொலீஸ் சோதனை

யாழ்ப்பாணம், மார்ச் 10

பண்ணைப் பாலத்தடியில் பயணிகளை சோதனையிடும் நடவடிக்கையில் நேற்று ஸ்ரீ லங்காப் பொலீஸார் ஈடுபடுத்தப்பட்டனர்.

பயணிகள் மொழிப்பிரச்சினை உட்பட வேறு சிரமங்களுமின்றி சோதனை நடவடிக்கைகளை முடித்துக் கொண்டு பயணத்தை தொடர்வதற்கு வசதியாகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்திய அமைதிப் படைப் பிரிவினர் பாதுகாப்பு அரண்களில் தங்கி பாதுகாப்பு அலுவல்களைக் கவனித்தனர். (ஒ-10-51)

## யாழ்ப்பாண லொறி மாகோவில் தீக்கிரை!

யாழ்ப்பாணம், மார்ச் 10

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் நிறுவன லொறி ஒன்று கடந்த புதன்கிழமை இரவு மாகோவுக்கு சமீபமாக தீக்கிரையாக்கப்பட்டது.

பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் லொறியுடன் சேர்த்து எரித்து நாசமாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-ஒ-10)

### முச்சந்தி முரளி



ஏஜன்சிக்காரர் வந்திட்டதாலை இனிமேல் முத்திரைக்குத் தட்டுப்பாடு இருக்காது எண்டு சொல்லுங்கோ......!

## முகவர் தபால் நிலையம்

யாழ்ப்பாணம் மார்ச் 10

யாழ்ப்பாணத்தில் முதலாவது முகவர் தபால் நிலையம் ஒன்று திறக்கப்படும்.

யாழ் மணிக்கூட்டு வீதியில் இன்று காலை 10 மணிக்கு தபால் அத்தியட்சகர் பிரஸ்தாப முகவர் தபால் நிலையத்தைத் திறந்து வைப்பார்.

அரச தபால் நிலையங்களில் உள்ள சகல சேவைகளும் இங்கு விடுமுறை நாட்களிலும் நடைபெறும். (அ)

கலர் படப் பிரதி ஒன்று

ரூபா 4-75

விநியோகம் :- 3 முதல் 5 நாட்கள்

நவீன கம்பியூட்டர் மூலம்
பிரதி செய்ய நாடுங்கள் !

ஷப்ரு

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Honda Reconditioned புதிய பழைய Model C 90, C 70, C D 50, M D 90, Chaly மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. No 390. மெயின் வீதி, பஸ்ரியன் சந்தி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (9179)

வெள்ளை நிற கன்னி ஆடு பெரிய இனம் குட்டி போடும் நிலையில்விற்பனைக்குண்டு. விலை ரூபா 3000/- தொடர்பு 887, ஆஸ்பத்திரிவீதி, சுண்டுக்குளி. (9909)

தவக்காலத்திற்கு ஏற்ற சிலுவைப்பாதை, ஒப்பாரி, பசாம், திருமணித்தியாலம், செபமாலைத்தியானம்புத்தகங்களும் பசாம் ஒலிப்பதிவு நாடாக்களும்கிடைக்குமிடம்: புனித சிந்தாத்திரை மாதா செபமாலை ஸ்ரோர்ஸ், 140 சுருவில் வீதி, கரம்பொன், ஊர்காவற்றுறை. (9623)

தளபாடங்கள், அலுமாரி, கட்டில், மெத்தைகள், T.V., றேடியோ, குளிர்சாதனப் பெட்டி, மேசை, கதிரை, செற்றி, Show case, கண்ணாடி மேசை, லாச்சி மேசை, மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. சோ. நடராசா குருக்கள், வீரமாகாளி அம்மன் கோயில்வளவு, நல்லூர். (9801)

### மலிவு விற்பனை

ஹோல் - செற், அலுமாரிகள், சோக்கேசுகள், ஆர்மோனியம் Type - writer (போட்டபிள்), Fan, சாப்பாட்டுமேசை, 8' சாப்பாட்டு மேசை, கதிரைகள், கட்டில் மெத்தைகள், புத்தக அலுமாரிகள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்கள் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம். 112, 2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [9806]

### காணி விற்பனை

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்திற்கும் ஆணி தொழிற்சாலைக்கும் இடையில் வீதி அருகில் ஐந்து பரப்பு வீடு கட்டக்கூடிய காணி விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும்:. P. தியாகராஜா, Near Pumping Station, 86/8, பலாலி றேட், திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். (9918)

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

Hyline Silver பேட்டுக் குஞ்சுகளும், Hyline Black பேட்டுக் குஞ்சுகளும் பிறீமா (Prema) Lohmann பேட்டுக் குஞ்சுகளும் வெள்ளிக்கிழமையில் இருந்து விநியோகிக்கப்படும். 112, 2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (9805)

பிறிமாஇன ஒருநாட் புரொயிலர் குஞ்சுகள், லோமன் வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 15 - 03 - 1989 இல் விநியோகிக்கப்படும். 12 - 03 - 1989 முன் பதிவுசெய்க. 1. C.S K பாம்சென்ரர், கச்சேரியடி, 2. கிருஷ்ணு பாம் சென்ரர், திருநெல்வேலிச் சந்தி, 3. திருமாள் ஸ்ரோர்ஸ் சிவலிங்கப் புளியடி, 4Red Rose Farm வல்வெட்டித்துறை. (9782)

### கோழிக்குஞ்சு விநியோகம்
UPLANDS FARM

நற்பத்தைந்து நாட்களில் வளர்ச்சியடையும் (Cekalh) பிறவுண் சேவல்குஞ்சு விலை ரூ 4. 50 (15- 3- 89) புதன் கிழமை விநியோகிக்கப்படும். மொத்தமாக வாங்கி விநியோகிக்கும் வியாபாரிகளுக்கும் பாம்காறர்களுக்கும் விசேஷ சலுகை உண்டு. முன் கூட்டியே பதிவு செய்யவும். இல. 9, கந்தையா லேன், சுன்னுகம், (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) (9925)

### தேவை

யாழ் நகரில் உள்ள பான்ஸி (Fancy) கூட்ஸ் ஸ்தாபனத்திற்கு 17 வயதுக்குட்பட்ட ஆண் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு: 456, C/o உதயன். (9921)

### தேவை

சுண்டுக்குளி சோமசுந்தரம் அவனியூவிலுள்ள பாலர் வகுப்பு மாணவிக்கு மாலை 2. 00 - 4.00 மணிக்கு இடையில்வீட்டில் வந்து கற்பிப்பதற்கு பயிற்றப்பட்ட அல்லது ஓய்வுபெற்ற ஆசிரியர் தேவை. வேதனம் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு:- 224, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (9808)

### திருத்துநர் தேவை

தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ, டெக் வானெலி இவையாவும் தரமாக திருத்தம் செய்யக்கூடிய திருத்துநர் தேவை. விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ்வரும் விலாசத்துக்கு உடன் தொடர்பு கொள்ளவும். இ. செல்வராஜா, ராஜா எலக்ரோனிக், கண்டி வீதி, கிளிநொச்சி. (9903)

### பெண் நெசவாளர் தேவை

மின்தறி நெசவாலைக்கு அனுபவம் மிக்க பெண் நெசவாளர், பயிலுநர் உடன் தேவை. நேரில் வரவும். தங்குமிட வசதியுண்டு. ஸ்ரீ ராஜ் ரெக்ஸ் இன்டஸ்றீஸ், வட்டுக்கோட்டை கிழக்கு சித்தங்கேணி. (வட்டு. இந்துக் கல்லூரிக்கு அருகாமையில்) (9912)

### தவறிவிட்டது

மறிஞ ஷிருணி செல்வநாயகம் ஆகிய எனது அடையாள அட்டை இல. 687931467V யாழ்ப்பாணம் கோவில் வீதிக்கும் பெரிய கோவிலுக்குமிடையில் 27- 2- 89 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காயாலயத்தில் ஒப்படைக்கவும். (9926)

தின்னவேலி மாரியம்மன் வீதியில் வசிக்கும் கணபதிப்பிள்ளை தம்பையா என்பவரது அடையாள அட்டை இல. 102223116 V தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (9923)

ஞானப்பிரகாசம் ஞானரமணர் ஆகிய எனது அடையாள அட்டை இலக்கம் 502860330V, சேவை அடையாள அட்டையும்25-1-89இல் யாழ். ஆஸ்பத்திரி அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அதிலுள்ள முகவரியில் ஒப்படைக்கவும் அல்லது தபாலில் அனுப்பி வைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (9796)

### மகளிருக்குரிய அலங்கார மனையியல் கற்கை நெறிகள்

வழக்கமாக நடைபெறும் வகுப்புகள் உடை தைத்தல், கேக்வகை தயாரித்தல், மணமகள் உடையலங்காரம், சிகை அலங்காரம், மனை அலங்காரம் மற்றும் பல தரப்பட்ட கை நுணுக்க வேலைகள் தொடர்ந்து நடைபெறும். தொடர்புகொள்க: நிர்வாகி, அனிற்ரு அழகியற்கலை நிலையம், பூநாறி மரத்தடி. Anita School K K S Road, Kokuvil. (9919)

### அமெரிக்க வீசா

ரோமன் எழுத்துக்களில் பிரதி பண்ணப்பட்ட அமெரிக்க வீசா விண்ணப்பங்கள் தொடர்பான விபரங்களுக்கு தொடர்புகொள்ளுங்கள்: க. ஜெயராஜசிங்கம், இல. 15, ஆடியபாதம் றேட், கல்வியங்காடு, நல்லூர். (9800)

### பாலர் ஆசிரியர் பயிற்சி

பாலர் ஆசிரியர் சங்கம் நடாத்தும் பாலர் ஆசிரியர் பயிற்சிநெறி க. பொ. த. (சா/த) சித்திபெற்ற பெண்கள் கற்கலாம். சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் நடைபெறும். நேரில் வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம் மே/பா உயர்கலைக் கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (9770)

### வகுப்புகள்

கேக் ஐசிங், ஜெனறல் குக்கரி பிரத்தியேகமான செய்முறைப் பயிற்சியுடன் பயிற்றுவிக்கப்படும். வெளிநாடு செல்வோருக்கும் இல்லத்தரசிகளுக்கும் சிறந்த ஒரு வரப்பிரசாதம். கிழமை நாட்களில், ஆரம்பம்: 10- 3- 1989 தொடர்பு: N. Arullananda 11/2, Wyman Road Nallur (C/1609)

Civil Engineering விரும்பிய பாடநெறியில் துரித இரு மாத வகுப்பு. கணிதம், ஆங்கிலம் அறிவுடையவர்கள் விபரங்களுடன் 15-03-1989 முன்பாக தபால் மூலம் விண்ணப்பிக்கவும். 819, Hospital Road Jaffna (9775)

### பயிற்சி வகுப்புகள்

ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறுகின்ற பாலர் ஆசிரியைக்கான பயிற்சி வகுப்புடன் முதலுதவி வகுப்பும் நடைபெறும் சில வெற்றிடங்களே உள்ளன. கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. விபரங்களுக்கு நேரில், ''ஞானக் குழந்தை இல்லம்'' பாலர் பாடசாலை, 49/5, யாழ்வீதி, யாழ்ப்பாணம். (9905)

### A/L - 91 இரசாயனம்

108 Brown Road A/L 91 இரசாயனம், ஆசிரியர் சத்தீஸ், ஆரம்பம்: (14- 3- 89) செவ்வாய் 6. 30 a.m, செவ்வாய், வியாழன் 6. 30 a.m பெயர்களைப் பதிவுசெய்யவும். (9924)

## முல்லை இளைஞர் மன்ற செயல் திட்டம்

மாங்குளம், மார்ச். 10

முல்லைத்தீவு இளைஞர் முன்னேற்ற மன்றத்தினரால் எதிர்காலச் செயல் திட்டம் பற்றி ஆய்வு ஒன்று நடாத்தப்பட்டது.

இதில் அடுத்த ஆண்டு கல்வி சமயவளர்ச்சி, சமூக அபிவிருத்தி இடம் பெயர்ந்தோருக்கு சுய தொழில் வாய்ப்பை ஏற்படுத்துதல் போன்ற, பல செயல் திட்டங்களை நடைமுறைப் படுத்த உத்தேசித்துள்ளனர்.

பாதிப்புற்று இடம் பெயர்ந்த மக்களுக்கு இருப்பிட வசதிகளைச் செய்து கொடுத்தல், இளைஞர்களிடையே கலை கலாசாரப் போட்டிகளை நடத்துதல், போன்ற திட்டங்களையும் அமுல் செய்யவுள்ளனர்.

அத்துடன் மாதாந்தம் ''ஆங்கிலம்'' என்னும் ஆங்கிலப் பத்திரிகையை எதிர் வரும் ஜனவரி மாதம் முதல் வெளியிடவும் தீர்மானித்துள்ளனர். (ச- 94)

## ஆசிரியை ஓய்வு

மானிப்பாய், மார்ச். 10

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் நீண்டகாலமாக ஆசிரியையாக கடமையாற்றிய திருமதி பராசக்தி சுப்பிரமணியம் தமது முப்பது வருட ஆசிரியர் சேவையில் இருந்து இளைப்பாறியுள்ளார்.

மாணவர்களின் ஆரம்ப கல்வி ஆசிரியையாக விளங்கிய இவர் மாணவர் மொழியறிவு எழுத்தாற்றல் பெறுவதற்கு பேருதவியாக விளங்கினர். (க - 90)


இன்று ஆரம்பம்!

A/L - 89 PHYSICS

ஆசிரியர்:-
R. சத்தியசீலன்
B M. C. முன் லேன், யாழ்ப்பாணம்.

DAY CLASSES
(MON to FRI)
8. 30 a.m- 9.30 a.m
கூப்பொருளின் இயல்புகள்

(C/[illegible])



## றெபின் சோப் விலைப்பட்டியல்

| | | ரூபா. சதம் |
|---|---|---|
| றெபின் பார் சோப் | — | 20. 00 |
| றெபின் ½ பார் | — | 10. 00 |
| றெபின் வெள்ளை | — | 3 60 |
| றெபின் நீலம் | — | 3. 60 |
| றெபின் பேபி | — | 1. 50 |
| பெனிகுரா டல்கம் பவுடர் | — | 10: 00 |

வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

### த பெனின்சுலா குரூப்

பெனின்சுலா சவர்க்காரத் தொழிற்சாலை
163, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்

(9973)



## WANTED RESIDENT DOCTORS

With M B B S for the Unified Medical Service of the Jaffna Diocese of the Church of South India

Salary: Negotiable
Apply before 7th April 1989

The Acting Medical Superintendent,
Green Memorial Hospital,
Manipay. [C/1834]



## PERSONAL CLASSES
for

PHYSICS — ஆசிரியர்: ✶ R. சத்தியசீலன்
ZOOLOGY — ஆசிரியர்: ✶ R. ஈஸ்வரதாசன்

B M.C முன் லேன், யாழ்ப்பாணம்

### Weekend Classes

AL 89 PAPER CLASS
7.15 a.m. PHYSICS & 8.30 a.m ZOOLOGY

### A/L 89 & 90

10-30 a.m. ஒட்டமின்னியல் 9-30 a.m பாகுபாடு
11-30 a.m. பொறியியல்
12-30 a.m. வெப்பவியல்.
(நடைபெறுகிறது)

(C/1835)


## அந்தியேட்டி அழைப்பு

(11 - 03 - 1989)



### உயர்திரு தாமோதரம்பிள்ளை சங்கரப்பிள்ளை

(சட்டத்தரணி)

5-2-89 இல் இறைவனடி எய்திய எமது அன்புத் தெய்வம் திரு. தா. சங்கரப்பிள்ளை அவர்களின் அந்தியேட்டி 11-3-89 சனிக்கிழமை காலை 10 மணிக்கு சுழிபுரம் 'தாமோதரவாசா' இல்லத்தில் நடைபெறும்.

அன்னுரின் ஆத்ம சாந்திக்காக நடாத்தப்படும் இந்நிகழ்ச்சியில் சமுகமளித்து பிரார்த்திக்கும் வண்ணம் உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேம்.

சகோதரி, மைத்துனி,
உற்ருர், உறவினர்.
'தாமோதரவாசா'
சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள்.
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(9809)

## மிருதங்க அரங்கேற்றம்

மிருதங்க வித்துவான் பிரம்மஸ்ரீ
சு. வரதராஜ சர்மா
அவர்களின் மாணவன்

### சிவத்திரு வ. ராமேஸ்வரன்
அவர்களின் மிருதங்க அரங்கேற்றம்

தலைவர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
இடம்: திருஞானசம்பந்தர் ஆதீனம் - நல்லூர்
திகதி: 10 - 03 - 1989 வெள்ளிக்கிழமை
நேரம்: பி. ப. 2.30 மணி
பாட்டு: சங்கீத வித்துவான் பிரம்மஸ்ரீ K. இராமநாதன் அவர்கள்

பெரியோர்கள், கலைஞர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சமுகந்தந்து சிறப்பித்து வாழ்த்தும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேம்.

சங்கீத வித்துவான்,
சிவத்திரு மு. வர்ணகுலசிங்கம்
தம்பதிகள்


சிறுவிளான்,
இளவாலை.

[9804]

தென்மயிலை ஓய்வுபெற்ற ஆசிரியர்

### உயர்திரு ஆறுமுகம் இராமலிங்கம்
அவர்களின்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 23 - 09 - 1920
உதிர்வு: 20 - 02 - 1988

திதி: 10 - 03 - 1989

அந்தியும் பகலும் என்றும் குடும்பத்தைக் கோயிலாக்கி
சிந்தனை மனைவி மக்கள் மருகர் பேரரோடு
சுந்ததம் அன்பு பாய்ச்சி வாழ்ந்த இராமலிங்கம்
நந்தியின் அடியை சேர்ந்த முதலாண்டை
அஞ்சலி செய்வோம்.

மனைவி: திருமதி இ. மகேஸ்வரி,
பிள்ளைகள், மருகர், பேரர்.

தென்மயிலை,
தெல்லிப்பழை.

[9972]

## அந்தியேட்டி நாள் நினைவஞ்சலி



### உயர்திரு செல்லையா மகேந்திரன்

தோற்றம்: 1943 - 03 - 22
மறைவு: 1989 - 02 - 06

அண்ணு! உமை இழந்து
அன்புக்குத் தவிக்கின்றேம்
பாசத்தின் மா மலையாய்,
பரிவுக்கு இலக்கணமாய்,
அறிவுக்கு ஜோதியாய்,
ஆற்றலுக்கு எடுத்துரையாய்,
இவ்வுலகில் வாழ்ந்த காலம்
அழியாக் கோலங்கள்! அணையா தீபங்கள்!!
காரணம் கேட்கின்றேம்; மாரகம் வாய்திறக்குதில்லை.

அன்புச் சோதரிகள்.

சந்தா தோட்டம்,
புலோலி கிழக்கு,
புலோலி.

[9802]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லைப் பிரதேசங்களில் 27 காவல் நிலையங்கள்

கொழும்பு, மார்ச்10
பொலன்னறுவ - மட்டக்களப்பு எல்லைப் பகுதியில் 27 காவல் நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

ஒவ்வொரு காவல் நிலையத்திலும் 20 சிங்கள இளைஞரும் 5 இராணுவத்தினரும் பணிபுரிவர்.

சிங்கள மக்களின் பாதுகாப்புக் கருதி இக்காவல் நிலையங்கள் நிறுவப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)


## கொம்பியூட்டர் பயிற்சி

**Diploma in Data Processing & Computer Programming Course**

புதிய பிரிவுகள்: 11-03-89 (Sat & Sun)

1. BASIC
   2 1/2 MONTHS — 8.00 a.m - 10.00 a.m
2. ADVANCED BASIC
   1 1/2 MONTHS — 11.00 a.m - 1.30 p.m
3. COBOL
   3 MONTHS — 10.00 a.m - 11.30 a.m
   (12 - 03 - 1989)

1st Payment: Rs. 400/-

IBM Super/XT, IBM Compatible Apple உட்பட பல நவீன Computer களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.

✶ மல்லாகம் கிளையில் 10-03-89 (3.30 p.m) இற்கு பிரிவுகள் ஆரம்பமாகும்.

**IDP Computer Centre**
342, K.K.S. Road,
JAFFNA.

Branch: 7th Mile post. K.K.S Road, Mallagam.

[C-1810]



## வெளிநிலைப் பல்கலைக்கழகக் கல்வி

# G. A. Q. - B. A.

1989 — 90 - கல்வியாண்டு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| தமிழ் | — | குழந்தை |
| இந்துநாகரிகம் | — | காரை சுந்தரம்பிள்ளை |
| அரசியல் | — | தமீம் |
| மெய்யியல் | — | சந்திரராஜா |

வெளிநிலைப் பல்கலைக்கழகக் கல்வியில் தனித்துவம் வாய்ந்த இவ்விரிவுரையாளர் குழு யாழ்நகரில் எமது நிறுவனத்தில் மட்டுமே கற்பிப்பார்.

ஆரம்பம்: 11-3-1989
சனி 11-00 a m

**BECON கல்வி நிலையம்**
156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

17 )6ς(


# முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட வீடுகளைத் திருத்த நடவடிக்கை

மாங்குளம், மார்ச் 10
முல்லைத்தீவு மாவட்டத்தில் வன்செயலில் பாதிக்கப்பட்ட வீடுகளைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வீட்டின் பகுதி திருத்த வேலைக்காக 2475 வீடுகளும், முழுத் திருத்த வேலைக்காக 1974 வீடுகளும் துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பகுதி திருத்த வேலைக்காக 30 வீடுகளும் முழுத் திருத்த வேலைக்காக 25 வீடுகளும், பாண்டியன்குளம் (மாந்தை) உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பகுதி திருத்த வேலைக்காக 20 வீடுகளும் முழுத் திருத்த வேலைக்காக 15 வீடுகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி சகல திருத்த வேலைகளுக்கும் 430 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மேற்படி வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் தத்தம் பகுதியில் வீடுகள் திருத்துவதற்குத் தேவையான சீமெந்து, ஓடு, மரம் போன்றவை மத்திய இடங்களில் உரியவர்கள் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தேக்கி வைக்கப்படும்.

மேசன் வேலைக்கூலிக்காக மதிப்பிடப்பட்ட வீட்டுத் தொகையின் 10/- வீதம் காசாக வழங்கப்படும். புதுக்குடியிருப்பு முத்தையன்கட்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு புனர்வாழ்வு அமைச்சினால் இரு புதிய லொறிகள் வழங்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு, துணுக்காய், பாண்டியன்குளம் சங்கங்களுக்கும் லொறிகள் வழங்கப்படவுள்ளன. மேற்படி லொறிகளை நோராட் நிறுவனமும், வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனமும் வழங்க முன்வந்துள்ளது.

மற்றும் பின்தங்கிய பகுதி கால்நடை வளர்ப்போரின் பால் உற்பத்தியை பெருக்கும் நோக்கத்துடன் மாங்குளம் பால் சபை நிலையத்துக்கு பால் எடுத்துச்செல்வதற்கும், புதிய லொறிகள் பாவிக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி தகவல்களை முல்லைத்தீவு திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. ஆர். தர்மகுலசிங்கம் தெரிவித்தார். (க-94)

## பாராட்டு விழா

கிளிநொச்சி, மார்ச்.10
கிளிநொச்சி கொத்தணிப் பாடசாலைகளிலிருந்து 5 ஆம் 6 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கான பாராட்டுவிழா அண்மையில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் கிளிநொச்சி பிராந்திய கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கியதுடன் அவர்களைப் பாராட்டி உரையாற்றினர்.

இந்த விழா கிளிநொச்சி கொத்தணி அதிபர் திரு. ந. சோதிநாதன் தலைமையில் நடைபெற்றது. (ச-ரி)

## சனுதனனின் ஒவியக் கண்காட்சி

கொக்குவில், மார்ச்.10
எதிர்வரும் 12 ஆம் 13ஆம் 14 ஆம் திகதிகளில் பிற்பகல் 2 - 00 மணிமுதல் 5 - 00 மணி வரை யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் சனுதனன் வழங்கும் ஓவியக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக மெய்யியற்றுறைத் தலைவர் கலாநிதி சே. கிருஷ்ணராஜா, திருமதி. இ. கிருஷ்ணராஜா ஆகியோரால் இந் நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

திருமதி. சி. வசந்தி புஸ்பநாதன் மங்கள விளக்கு ஏற்றுவார். (இ - 69

எந்தப் பொலீஸில் சேவை?

## பொலீஸாரின் விருப்பம் அறிகிறார் மா அதிபர்

கொழும்பு, மார்ச்10
தேசிய பொலீஸ் படை, மாகாணப் பொலீஸ் படை— இவற்றில் எதில் சேர்ந்து பணியாற்ற விரும்புகிறீர்கள்?

இலங்கைப் பொலீஸ் படையில் உள்ள 27 ஆயிரம் ஆண் பெண் பொலீஸாருக்கு அனுப்பி வைத்திருக்கும் கடிதம் ஒன்றில் பொலீஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா முன்கண்டவாறு விருப்பம் கேட்டுள்ளார்.

அரசியல் யாப்புக்குக் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தத்தின் கீழ் பொலீஸ் சேவை மத்திய, மாகாண பிரிவுகளாக வகுக்கப்படுகிறது.

இம்மாதம் 15ஆம் திகதிக்கு இடையில் பொலீஸார் அதற்குரிய பாரத்தை நிரப்பி தங்கள் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று பொலீஸ் மா அதிபர் கேட்டிருக்கிறார். (ஓ எ)

## ● அமைதிப்படை பின்னே அழுதுகொண்டு சென்ற பெண்கள்!

சுழிபுரம், மார்ச்10
சுழிபுரம், பண்ணாகம் பகுதிகளைக் கடந்த திங்கட்கிழமை இந்திய அமைதிப்படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர். அப்போது பல இளைஞர்களை அழைத்துச் சென்றனர் விட்டார்களா பெண்கள்? தாய்மாரும், மனைவிமாரும், அக்காமாரும் என்று கதறி அழுதுகொண்டு அவர்களை விடுவிக்குமாறு கேட்டு அமைதிப்படை ஜவான்களுக்குப் பின்னால் தொடர்ந்தார்கள்.

கடந்த திங்கட் கிழமை அன்று சுழிபுரம், தொல்புரம், பண்ணாகம் ஆகிய கிராமங்கள் அமைதிப்படையினரால் முற்றுகை இடப்பட்டன. வீடு வீடாகச் சென்ற படையினர் இளைஞர்களை தம்முடன் அழைத்துச் சென்றனர்.

பண்ணாகம் மெய்கண்டான் பகுதி, சுழிபுரம் பகுதிகளில் பிடிக்கப்பட்ட இளைஞர்கள் விசாரணை செய்யப்பட்டுப் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர்கள் பலரிடம் புதிய தொண்டர் படையில் சேர்வதற்கு விருப்பம் உண்டா என்றும் வினவப்பட்டதாம். (அ-28)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

1989 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.30 மணிவரை கிளிநொச்சி உபமின் நிலையத்தில் பாரிய திருத்தவேலைகளுக்காககிளிநொச்சி, முல்லைத்தீவுமாவட்டங்களுக்கான மின் விநியோகம் (ஆனையிறவு, பரந்தன், ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மல்லாவி, துணுக்காய் உட்பட) தடைப்படும் என்பதை இத்தால் அறியத் தருகிறேன். பாவனையாளர்கட்கு இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு இலங்கை மின்சாரசபை வருத்தம் தெரிவித்துக்கொள்கிறது.

மின் பொறியியலாளர்,
கிளிநொச்சிப் பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
மாங்குளம்.

(C/1637)


## அறிவித்தல்

HARRILIST

**ஹரிசன்ஸ் என்ஜினியரிங் (கொழும்பு) லிமிட்டெட்**

15-02-1989 முதல்திரு. கே. கணேசானந்தன் எம்மிடம் தொழில் புரிவதில்லை என்பதை எமது வாடிக்கையாளர் மற்றும் விநியோகத்தர்களுக்கும் நாம் இத்தால் அறியத்தருகின்றோம்.

த என்பீல்ட் இந்தியா லிமிட்டெட், இந்தியா.
லிஸ்டர் பெற்றர் லிமிட்டெட், இங்கிலாந்து.

—ஆகிய நிறுவனங்கள் உட்பட எமது பொறுப்பில் உள்ள ஏனைய ஏஜன்ஸிகள் சார்பில் பிரதிநிதித்துவம் செய்வதற்கு அவருக்கு எதுவித அதிகாரமும் இல்லை.

எமது வாடிக்கையாளர் மற்றும் விநியோகஸ்தர்களுக்கு எமது ஆதரவும் சேவையும் தொடர்ந்து கிடைக்கும் என்று நாம் உறுதியளிக்கிறோம்.

**ஹரிசன்ஸ் என்ஜினியரிங் (கொழும்பு) லிமிட்டெட்.**
330, ரி. பி. ஜயா மாவத்த
டார்லி வீதி
கொழும்பு — 10.
தொலைபேசி: 596871—6.



## NEW SCIENCE ACADEMY

B M C முன்பாக JAFFNA

நாளை ஆரம்பம்

# 91 AL

| | | | |
|---|---|---|---|
| 7-30 | — CHEMISTRY | — | சண் |
| 8-30 | — ZOOLOGY | — | பரந்தாமன் |
| 9-30 | — PHYSICS | — | மணியம் |
| 10-30 | — BOTANY | — | குணசீலன் |
| | | | ஐங்கரநேசன் |
| 10-30 | — Pure | MATHS | வெக்டர் |
| 11-30 | App | MATHS | பிரேம்நாத் |
| 12-30 | — PHYSICS | — | சோதிலிங்கம் |
| 1-30 | — ZOOLOGY | — | தம்பிராஜா |

ஆரம்பம்: 11 03-89
Sat 7 30 a.m

[C-1871]



உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

## COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING IN BASIC LANGUAGE

பயிற்சிக் காலம்: 2 1/2 மாதம் ஆரம்பம்: 12-03-89
(சனி, ஞாயிறு வகுப்புகள்)

கட்டணம்: ரூபா 950/- இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்.

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிர் ஊட்டப்பட்ட அறையில் கூடியநேர செய்முறைப் பயிற்சி (I. B. M. COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிக்கப்பட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆகையால் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பதிவு செய்யவும்.

விண்ணப்ப முடிவு நாள்: 11-03-89




**UNIKCO COMPUTER CENTRE**
No. 5, மின்சார நிலைய வீதி,
2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உப தபாற்கந்தோர் அருகாமை)

[C/1792]



## PERSONAL CLASSES

230, நாவலர் வீதி, இலுப்பையடி, யாழ்ப்பாணம்.

# 91 A/L

ஆரம்பம்: 11. 03. 1989

| | | |
|---|---|---|
| இரசாயனவியல்: | திரு. சண்முகசுந்தரம் | 17-03-1989 வெள்ளி 2.00 — 3.00 |
| பௌதிகவியல்: | திரு. சோதிலிங்கம் | 16-03-1989 வியாழக்கிழமை 4.30 — 5.30 |
| தாவரவியல்: | திரு. குணசீலன் | 15-03-1989 புதன் 3.00 — 4.00 |
| விலங்கியல்: | திரு. பரந்தாமன் | 15-03-1989 புதன் 4.00 — 5.00 |
| தூய - பிரயோக கணிதம் | திரு. வெக்டர் வேலாயுதம் | 11-03-1989 சனிக்கிழமை 12.30 — 2.30 |

(C/1819)



## NEW MASTER INSTITUTE

B.M.C. LANE, JAFFNA

# 91 A L

(Saturday & Sunday)

**WEEKEND CLASSES**

ஆரம்பம்:
12 03 89 SUNDAY 10.30 a.m.

| | | |
|---|---|---|
| 10.30 | – Chemistry | – திரு. தில்லைநாதன் |
| 11.30 | – Physics | – திரு. வர்ணம் |
| 12.30 | – Zoology | – திரு நாகநாதன் |
| 1.30 | – Botany | – திரு. குகதாசன் |
| 1.30 | – 3 30 pure & Applied Maths | – திரு நல்லையா |

( /1829)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது வெளிவருகிறது...!

புதிய சமுதாய வெளியீட்டகத்தின்

● மாதாந்தத் தமிழ் பத்திரிகை ●

"அறவழி"

NONVIOLENCE

இலங்கையில் வெளியிடப்படும்

**ஒரே அறவழி இதழ்**

விபரங்களுக்குத் தொடர்பு கொள்க:

அறவழி
த. பெ. இல. 2,
சாவகச்சேரி.

[9962]


## 6 ஆவது நினைவஞ்சலி



**லலிதாதேவி பேராயிரம்பிள்ளை**

(ஆசிரியை மானிப்பாய் மகளிர் கல்லூரி)

மலர்வு: 17-08-1933 உதிர்வு: 16-02-1983

ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்:

[illegible] கணவன், பிள்ளைகள்.

சுதுமலை மத்தி.

(9967)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
01 - 08 - 1945

மறைவு:
10 - 03 - 1986

**சின்னப்பு அலோசியஸ்**

பாசமுள்ள கணவனுமாய்
நேசமுள்ள தந்தையுமாய்
பக்தியுள்ள புதல்வனுமாய்
பண்புமிக்க தோழனுமாய்
பாரினிலே பாங்குடனே
பரிமளிக்க வாழ்ந்தவரே
எமதுயிரே உமதிழப்பு
முடிவற்ற துயரமய்யா
எமதன்பே உம் நினைவு
மறக்கவொண்ணு வசந்தமய்யா

எங்கள் அன்பரின் ஆத்ம சாந்திக்காய் இறைவனை வேண்டி நிற்கும்:

அன்பு மனைவி,
பிள்ளைகள், உறவினர்கள்

16/3, கச்சேரி நல்லூர் ரோட்,
யாழ்ப்பாணம்.

(9774)

### சிக்கனகூ.ச. ச. கூட்டம்

முல்லைத்தீவு, மார்ச்10

முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடன் உதவி கூட்டுறவுச் சங்க சமாஜத்தின் மூன்ருவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை மாங்குளம் மகாவித்தியாலய மண்டபத்தில் சமாஜத்தலைவர் திரு. ச. சிவானந்தம் தலைமையில் நடைபெறும். (க-92)

### தட்டுப்பாடு நீங்கியது

கோப்பாய் மார்ச் 10

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் நிலவி வந்த தண்ணீர் பிரச்சினை வைத்தியசாலை பொறுப்பதிகாரியின் முயற்சியினுல் நீரிறைக்கும் மோட்டர் புதிதாக பொருத்தப்பட்டு நீக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக உள் நோயாளர் பிரிவுக்கு நீர் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-72)


A/L 89

**Physics**

ஆசிரியர்

**R சத்தியசிலன்**

21, மணல்தரை லேன்,
கந்தர்மடம் (யாழ்.)
Sat & Sun 4 15 p m
சடப்பொருளின் இயல்புகள்
5-15 p m ஒலியியல்
[ஆரம்பமாகிவிட்டது]
(. ]1639)


## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் வல்லிபுரம் பொன்னுத்துரை**

தோற்றம்: 24-10-1918
மறைவு: 10-03-1982

பாசத்துடன் எம்மை
வளர்த்த
பண்புள்ள தெய்வமே!
நேசமுடன் எம்மை
நேசித்த
நேர்மையுள்ள தெய்வமே!
தெய்வத்துடன் சேர்ந்து
விட்ட
ஆண்டுகள் ஏழாயினும்–
நீர்
எம் இல்லமெல்லாம்
நிறைந்து நின்று
வாழ்த்துகின்றீர்கள்.

பாசமுள்ள,
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்
பிள்ளைகள்.

(9797)

### பருத்துறை -- திருமலை பஸ்சேவை

வடமராட்சி, மார்ச். 10

பருத்தித்துறை திருமலை பஸ் சேவை முன்பு நடந்தது போல பருத்துறையிலிருந்து மாலிச்சந்தி நவிண்டில் உடுப்பிட்டி, தொண்டமனாறு கெருடாவில், மயிலந்தனை, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களுக்கு ஊடாக பருத்தித்துறை சென்று அங்கிருந்து திருகோணமலை செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச - 160)

### நோயாளிக்குப் பால் இல்லை

ஒரு வருடத்திற்கு மேலாக பருத்தித்துறை மந்திகை வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு பால் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனுல் நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதுவிடயமாக அதிகாரிகளை வினவியபோது பால்மாவின் விலை ஏற்றமே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. (இ-160)

### விண்ணபங்கள் நிராகரிக்கப்பட்டன

பச்சிலைப்பள்ளி, மார்ச். 10

உள்ளூராட்சி மன்றங்களில் கடமை ஆற்றும் ஊழியர்களை எழுதுனர் தரம் II 'ஆ' விற்கும் தட்டெழுத்தாளர் தரம் I 'ஆ' விற்கும் பதவியுயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்த யாழ் மாவட்ட உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் பலரின் விண்ணப்பங்கள் உரிய காலத்தில் கிடைக்காததால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இவை உள்ளூராட்சி ஆணையாளரால் திருப்பி அனுப்பட்டுள்ளன.

இப் போட்டிப் பரீட்சை சம்பந்தமான விண்ணப்பம் அடங்கிய வர்த்தமானிப் பத்திரிகை தாமதமாக கிடைத்ததால் தான் தமது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டதாக ஊழியர்கள் கவலை தெரிவித்தனர். (க - 117)

### விவசாயிகள் முறைப்பாடு

மானிப்பாய், மார்ச் 10

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினுல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவி அரசாங்க அதிபர்களூடாக வழங்கப்படவுள்ள உற்பத்தித்திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நன்கொடைப்பணத்தை பெற்றுக் கொள்ள முடியாமல் சண்டிலிப்பாய் கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த முப்பதுக்கும் அதிகமான விவசாயிகள் பெரும் கவலை கொண்டுள்ளனர்.

இந்த நன்கொடைப் பணத்தைப் பெறுவதற்கு ஏற்ற தகைமைகள் அவர்களுக்கு இருந்தும் யாழ்ப்பாணம் செயலகத்தால் அனுப்பப்பட்ட நன்கொடை பெறுவதற்கான படங்கள் அடங்கிய கூட்டில் ஆறும் கூடு வெட்டப்பட்டுக் காணப்படுகிறது.

பாதிக்கப்பட்ட இந்த விவசாயிகள் சண்டிலிப்பாய் விவசாயிகள் சங்கத்தின் ஊடாக யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் தமது முறைப்பாடுகளை முன்வைத்து உற்பத்தி முயற்சிக்கான நன்கொடையைத்தமக்கும் வழங்குமாறு கோரியுள்ளனர். (க-90)

### விண்ணப்பம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம் மார்ச் 10

வடக்கு - கிழக்கு மாகாணசபைக் கல்வித் திணைக்களத்தில் லிகிதர்களாகக் கடமையாற்றுவதற்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் உள்ள லிகிதர்களிடம் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பான கடிதம் ஒன்று மாகாணசபை கல்வித் திணைக்களத்திலுல் யாழ். கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் [illegible] யாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. ([illegible])


91 ஆம் ஆண்டு ... மாணவர்க்கு

ஆரம்பம்: 11- 03- 1989   SAT & SUN

| | | |
|---|---|---|
| இரசாயனவியல் | Mr. நாகரட்ணம் B. Sc. | 6. 30 |
| விலங்கியல் | Mr. தம்பிராசா B. Sc. | 7. 30 |
| பௌதிகவியல் | Mr. மணியம் B. Sc. | 8. 30 |
| தூய/பிரயோக கணிதம் | Mr. கணேசன் B. Sc. | 9. 30 |
| தாவரவியல் | Mr. சிவவிரசிங்கம் B. Sc. | 10. 30 |
| பௌதிகவியல் | Mr. ரவீந்திரநாதன் B. Sc. | 11. 30 |

3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(ஆஸ்பத்திரி வீதிக்கு அண்மையில்)

★ அதிசிறந்த புள்ளிகள் (A) பெற்ற மாணவர்களில் அனேகர் எமது ஆசிரியர்களிடமே கற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ( ) 1820)


72 ஆவது வருடாந்த கிரிக்கெட்:

# பற்றிக்ஸ் - யாழ்ப்பாணக் கல்லூரி மோதல் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான (Battle of the Golds) 72ஆவது வருடாந்த கிரிக்கெட் போட்டி இன்று வெள்ளிக்கிழமை சென்.பற்றிக்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இன்று நண்பகல் 12மணிக்கு ஆரம்பமாகும் இந்தப்போட்டி நாளை சனிக்கிழமையும் தொடர்ந்து நடைபெறும்.

இந்த இரண்டு கல்லூரி அணிகளைச் சேர்ந்தவர்களையும் இங்கு நாம் அறிமுகப் படுத்திவைக்கிறோம்.



**யாழ்ப்பாணக் கல்லூரி அணி**

(இடமிருந்து வலமாக) முன் வரிசையில் ரீ. முருகதாஸ்:- இரண்டு வருடங்களாக இந்த அணியில் விளையாடுபவர். சிறந்த இடதுகை துடுப்பாட்ட வீரர்.

எவ். ஜோன்சன்:- இரண்டு வருடங்களாக அணியில் விளையாடுபவர். தடுத்தாடும் துடுப்பாட்ட வீரர். பந்து வீச்சாளர்.

எ. பிரேமானந்தன்:- மூன்றுவருட அனுபவம் வாய்ந்த ஆரம்ப,வேகப் பந்துவீச்சாளர். வலதுகை துடுப்பாட்டவீரர்.

ஆர். குலசிங்கம்:-அணித் தலைவர். நான்கு வருட அனுபவம் உடையவர். இந்த கிரிக்கெட் சீசனில் அதிக ஓட்டங்களைப் பெற்றவர். சிறந்த பந்து தடுப்பாளர்.

ஜி. டானியல் மதியழகன்:- அணியின் உபதலைவர். மூன்று வருட அனுபவம் உடையவர். ஆரம்ப ஆட்டக்காரர். நடுத்தர பந்துவீச்சாளர்.

எஸ். விஞேதன்:- இரண்டு வருட அனுபவம் உடையவர். துடிப்புள்ள விக்கெட் காப்பாளர்.

எஸ்.ஜெனுர்தனன்:-இரண்டு வருட அனுபவம் உடையவர். பல்துறை திறமை உடையவர். வலதுகை பந்துவீச்சாளர்.

பின்வரிசையில் -

ஜி. செல்வேந்திரன்:-வலதுகை சுழல் பந்துவீச்சாளர். சிறந்த துடுப்பாட்டவீரர்.

எம்.சண்முகநாதன்:-சிறந்த பந்துத் தடுப்பாளர்.

என். ஜென்சன்:-துடிப்புள்ள விளையாட்டு வீரர்.

வி. சாயிராம்:- இரண்டு வருட அனுபவம் உடையவர். வலதுகை துடுப்பாட்டவீரர்.


எம். பாஸ்கரன்:- அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்.

எஸ். செந்தில்குமரன்:- இரண்டு வருட அனுபவம் உடையவர். நடுத்தர வேக பந்துவீச்சாளர் சிறந்த துடுப்பாட்ட வீரர்.

பி. உதயகுமார்:. வலதுகை துடுப்பாட்ட வீரர்.

டபிள்யூ. மதிதரன்:- ஆரம்ப இடதுகை பந்துவீச்சாளர்.

எஸ். நவீந்திரன்:நடுத்த வேகப்பந்து வீச்சாளர்.



**சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி**

இடமிருந்து வலமாக முன் வரிசையில் கியு. ஜே. இம்மானுவேல்:- வலதுகை வேகப் பந்து வீச்சாளர்.

ஜி. அன்ரனிப்பிள்ளை:- இடதுகை ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர்.

ஏ. ஐ. லொயல்லா:- அணித் தலைவர் மூன்றுவருட அனுபவம் உடையவர். வேப்க பந்துவீச்சாளர். வலதுகை பந்து வீச்சாளர்.

எஸ் செல்வராஜ்- அணியின் உபதலைவர் சிறந்த வேகப் பந்து வீச்சாளர் துரித துடுப்பாட்ட வீரர்.

ஜே. ஜே. நிக்கலஸ்:- விக்கெட் காப்பாளர் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்.

ஜி. வில்ரன்:- துரித துடுப்பாட்ட வீரர்.

பின்வரிசையில்.

எல். வில்சன்:- வலதுகை பந்துவீச்சாளர் சிறந்த பந்துக் காப்பாளர்.

ஜே. ஆர். வன்னியசிங்கம்:- துரித துடுப்பாட்ட வீரர் பந்துத் தடுப்பாளர்.

ரி. யூலியன்:- ஆரம்ப துடுப்பாட்டவீரர் இடதுகை சுழல் பந்துவீச்சாளர்.

எஸ். விஜேந்திரன்:- இடதுகை துடுப்பாட்ட வீரர். துடிப்பான பந்துத்தடுப்பாளர்.

எச். ஆர். எக்பேட்:- துரித பந்துத் தடுப்பாளர்.

எஸ். பி. அன்ரனிப்பிள்ளை:- அவதானமுள்ள துடுப்பாட்ட வீரரும், சிறந்த பந்துத் தடுப்பாளரும்.

ஜே. பி. பாஸ்கரச்சந்திரன்

(5 ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு:
**ஜோய் பூரணச்சந்திரன்**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:-**

உட்பகை யஞ்சித்தற் காக்க வுலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்.

**பொருள்:-**

உட்பகையை நீக்கித் தற்காப்புச் செய்து கொள்ள வேண்டும்; இல்லாவிடில் ஏமாந்த சமயம் பார்த்து, குயவன் மட்பாண்டத்தை அறுத்தெடுக்கும் கருவிபோல உட்பகை அடியோடு அறுத்தழித்து விடும்.


# உதயன்

இல. 292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
10.03.1989

தொலைபேசி 24805
22078
த.பெ.இல23


# தமிழ் அரச அதிகாரிகளே!

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள அரசதிணைக் களங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் அலுவலகங்களில், நிர்வாக வேலைகளைத் தமிழில் செய்வதில் அதிகாரிகள் அதிக அக்கறை காட்டவில்லை. இப்படி ஒரு குறைப்பாடு.

அதாவது தமிழை உத்தியோக மொழியாக—ஆட்சி மொழியாகப் பயன்படுத்துவதில் அதிகாரிகள் பின்னிற்பதாக ஒரு முறைப்பாடு.

இது பெரும் கவலைக்குரிய விடயம். கண்டிக்கப்பட வேண்டிய காரியம். தண்டிக்கப்படாவிட்டால் தமிழுக்குக் கிடைத்த அந்தஸ்தை தமிழரே அவமதித்தது போலாகும்.

அனேகமாக, இப்போது, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசுவோர், தமிழ் தெரிந்தவர்கள், தமிழ் படித்தவர்களே அரசாங்க, உள்ளூராட்சி பதவிகளை வகித்து வருகிறார்கள்.

வடக்கு - கிழக்கில் அரசாங்க நிர்வாக அலுவல்களில் தமிழைத் தாராளமாகப் பயன்படுத்துவதற்கு ஏற்கனவே சட்டரீதியாக வகை செய்யப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம், அனேக அரச திணைக்களங்கள் பொதுமக்களுடன் தமிழிலேயே தொடர்பு கொண்டு வந்தன. அவற்றுக்கு விதிவிலக்காகச் சில அதிகாரிகள் ஆங்கிலத்தில் கடிதங்களை அனுப்பி வந்ததும் உண்டு.

எனினும் உயர் அதிகாரிகள் பலரும் தமக்குக் கீழுள்ள அலுவலர்களுக்குப் பணிப்புரைகளையும், ஏனைய கடிதங்களையும் ஆங்கிலத்திலேயே எழுதி வந்தனர். வெவ்வேறு பகுதிகளின் உயர் அதிகாரிகள் தமக்கிடையேயும் ஆங்கிலத்திலேயே எழுதுகின்றனர். மாநாட்டு அறிக்கைகள், கலந்துரையாடல் அறிக்கைகள் பலவும் ஆங்கிலத்திலேயே தயாரிக்கப்படுகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கெனத் தனியான நிர்வாகம் வந்த பின்னரும், இந்த நிலைமை நீடிப்பது மக்கள் மனதைப் புண்படுத்துவது; வெட்கப்பட வேண்டியது.

வடக்கு-கிழக்கில் வாழ்பவர்கள் தமிழ் பேசும் மக்கள். குறிப்பிட்ட சில இடங்களில் மட்டுமே தமிழ் பேசாதவர்கள், தெரியாதவர்கள் வாழ்கிறார்கள். இப்பகுதியில் பணிபுரியும் ஊழியர்கள், அதிகாரிகளும் தமிழர்களே. குறிப்பிட்ட எண்ணிக்கையினரே தமிழ் தெரியாதவர்கள்.

நிலைமை இப்படி இருந்தபோதிலும், தமிழை நிர்வாக, ஆட்சி மொழியாகப் பயன்படுத்தச் சட்டம் வகை செய்த போதிலும், அதிகாரிகள் ஆங்கிலத்தில் அலுவலாற்ற, கோலோச்ச முனைவது விரும்பத் தக்கதா?

தமிழுக்கு ஐம்பதுக்கு ஐம்பது அந்தஸ்துக் கூடப் போதாது நூற்றுக்கு நூறு வேண்டுமென்று 35 வருடங்களாக தமிழ்மொழி உரிமைக்காகப் போராடியதன் அர்த்தம், தேவை எல்லாவற்றையும் அடியோடு சாய்த்து விழ்த்தலாமா?

கிடைத்த மொழி உரிமையைச் சரியாகப் பயன்படுத்தாவிடில், நாமே அந்த உரிமையை வேரறுத்தால், அதைவிடக் கொடுமை ஏது?

மேற்கிலிருந்து அல்லது தெற்கிலிருந்து சிங்களத்தில் ஒரு அரச கடிதம் வருகிறது என்றால் அது மொழித் திணிப்பு, அடிப்படை உரிமையினை மீறுதல் என்றெல்லாம் ஆர்த்து எழுகிறோம்.

எமது சொந்தப் பகுதியிலேயே, தமிழை—மொழி உரிமையை, நாமே சரிவரப் பயன்படுத்தாமல் இருந்து கொண்டு பிறரிடம் மொழி உரிமை கேட்பது ஏமாற்று வேலை என்றல்லவா புறஉலகம் இழித்துரைக்கும்?

சிங்களவர், தமிழருக்கு, தமிழ் உத்தியோகத்தருக்கு சிங்களத்தில் கடிதம் எழுதினால் அதனை மொழித் திணிப்பு என்கிறோம்; அல்லவா?

அவ்வாறாயின் தமிழர் — தமிழ் தெரிந்தவர், தமிழருக்கு தமிழ் உத்தியோகத்தருக்கு ஆங்கிலத்தில் கடிதம் எழுதினால் அதனை எப்படிச் சொல்வது? அதுவும் மொழித் திணிப்புத்தான்! அடிப்படை உரிமை மீறல் தான்!

தமிழ்ப்பகுதியிலே தமிழ் பேசுபவரே, தமிழர்மீது மொழித்திணிப்புச் செய்து, மொழி உரிமையை மீறுவதை தற்கொலைக்கு ஒப்பிடுவதைவிட வேறு எதற்கு உவமானிக்கலாம்?

தமிழ் அரச அதிகாரிகளே! உங்கள் ஆங்கில மோகத்தை உடனடியாகக் கைகழுவுங்கள்! தமிழில் பணிபுரியுங்கள்! நூற்றுக்கு நூறுவீதம் தமிழுக்கு இடம் கொடுங்கள்!

தமிழ் உணர்வும், இன அபிமானமும் சாதாரண மட்ட மக்களுக்கு மட்டும்தான் இருக்கவேண்டும்; உங்களுக்குத் தேவையில்லை என்று கணக்குப் போட்டு விடாதீர்கள்.

அவ்வாறு தப்புக்கணக்குப் போட்டால் நீங்கள் மொழிக்கும், இனத்துக்கும் துரோகம் இழைத்த பாவிகள் பட்டியலில் சேர்ந்துவிடுவீர்கள்.

## மெமோறியலுக்கு முதலிடம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

சுன்ஞகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற மானிப்பாய் கோப்பாய் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற நாடகப் போட்டியில் மானிப்பாய் மெமோறியல்கல்லூரி மாணவ மாணவிகள் சேர்ந்து நடித்த ''வீடு ஒன்று வாசல் மூன்று'' என்ற நாடகம் முதலிடத்தைப் பெற்றது.

இந்த நாடகம் நாடக ஆசிரியர் திரு. ஆ. கல்யாணசுந்தரேசனால் எழுதப்பட்ட இலக்கிய நாடகமாகும். (ச)

## ஈரான் ஜனாதிபதித் தேர்தல் ஆகஸ்டில்

தெஹ்ரான், மார்ச். 9

ஈரானின் ஐந்தாவது ஜனாதிபதித் தேர்தல் வருகிற ஆகஸ்ட் மாதம் நடைபெறும்.

தற்போதைய ஜனாதிபதி அலிகமேனி 1981 இல் தெரிவு செய்யப்பட்டார்.

ஈரான் அரசியல் யாப்பின் படி இவர் மூன்றாவது தடவையாகப் போட்டியிடமுடியாது.

## எதியோப்பிய ரயில் விபத்தில் 57 பேர் பலி

அடிஸ்அபாபா, மார்ச் 9

ரயில் விபத்து ஒன்றில் 57 பேர் உயிரிழந்தனர்; 54 பேர் காயம் அடைந்தனர்.

இந்த ரயில் விபத்து எதியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபாவுக்கும் டிஜிபோதிக்கும் இடையில் இடம்பெற்றது. (எ)

மனித உரிமைகள் தகராற்றில்

# உலக நீதிமன்றத் தீர்ப்பை ஏற்க சோவியத் யூனியன் சம்மதம்

## அமெரிக்கா வரவேற்பு

ஐ.நா. மார்ச் 9

மனித உரிமைகளைப் பேணுவது, அங்கீகரிப்பது போன்றவை சம்பந்தமான பிரச்சினைகளில் உலக நீதிமன்றத்தின் தீர்ப்புக்களை ஏற்கப் போவதாக சோவியத் யூனியன் நேற்று அறிவித்தது.

உலக நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தை ஏற்பது இல்லை என்று இதுவரைகாலமும் காட்டி வந்த எதிர்ப்பைக் கைவிடுவதாகவும் சோவியத் யூனியன், ஐ.நா. பொதுச் செயலாளர் நாயகத்திற்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் அறிவித்திருக்கின்றது.

சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெவர் நாட்ஸே ஐ.நா. பொதுச் செயலாளருக்கு இக்கடிதத்தை எழுதியிருக்கிறார்.

ஐ.நா. ஸ்தாபனம் மனித உரிமைகள் சம்பந்தமாக ஆறு உடன்படிக்கைகளை வைத்திருக்கிறது.

அதன்படி நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் பற்றி உலக நீதிமன்றத்திற்கு சகநாடுகள் முறையிடலாம். விசாரணையின் பின்னர் உலக நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை சம்பந்தப்பட்ட நாடு ஏற்கவேண்டும். இந்த நிலைப்பாட்டை சோவியத் யூனியன் இதுகாலவரை எதிர்த்து வந்தது.

சோவியத் யூனியன் உலக நீதி மன்றத்தின் நியாயாதிக்கத்தை ஏற்கப்போவது என்று வந்த செய்தியை அமெரிக்கா வரவேற்றது. (எ)

## சீன அரசு குற்றச்சாட்டு!

பீகிங், மார்ச் 9

வெளிநாடுளில் வாழும் திபெத்தியர்கள் தான் திபெத்தில் பிரிவினைக் கிளர்ச்சிக்குத் தூபமிடுகின்றனர் என்று சீனு நேற்றுக் குற்றஞ் சாட்டியது.

திபெத்துக்குள் வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களும் கடத்தப்பட்டு வருவதாகவும் சீனு மேலும் தெரிவித்தது.

உல்லாசப் பயணிகள் மூலம் வெளிநாடுகளிலுள்ள திபெத்தியர்கள் ஆயுதங்களை அனுப்பி வைக்கின்றனர் என்று நவசீன செய்தி ஸ்தாபனம் அறிவித்தது. (எ)

## பிரிட்டனில் இருந்து ஈரான் பிரசைகள் வெளியேற்றம்

லண்டன், மார்ச் 9

பிரிட்டனில் உள்ள ஈரானிய பிரஜைகளில் விரும்பத்தகாதவர்களை வெளியேற்றப்போவதாக பிரிட்டன் நேற்று அறிவித்தது.

நாட்டின் பாதுகாப்புக் கருதி இந்த நடவடிக்கை எடுப்பதாக தாட்சர் அரசு அறிவித்தது.

வெளியுறவு அமைச்சர் சேர் ஜிப்ரிஹோ இத்தகவலை பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் நேற்று வெளியிட்டார்.

பிரிட்டனில் 30 ஆயிரம் வரை ஈரானியர்கள் உள்ளனர்.

'சாத்தான் கவிதைகள்' நூல் பிரச்சினை தொடர்பாக ஈரான் பிரிட்டனுடனுன இராஜதந்திர உறவைத் துண்டித்ததைத் தொடர்ந்து பிரிட்டன் இந்த நடவடிக்கையை எடுத்தது.

இதனிடையில் — ஹொங்கொங்கில் உள்ள தூதரகத்தையும் மூடிவிடும்படி ஈரானைப் பிரிட்டன் கேட்டிருக்கிறது.

அதே வேளை லெபனுனில் இருந்து உடனடியாக வெளியேறிவிடும்படி பிரிட்டிஷ் பிரசைகளை பிரிட்டிஷ் அரசு கேட்டுள்ளது. (எ)

## அமெரிக்கா சிரியாவுக்கு வேண்டுகோள்

வாஷிங்டன். மார்ச், 9

சால்மன் ருஷ்டியைக் கொல்வதைத் தடுத்து நிறுத்தும்படி அமெரிக்க அரசு சிரியாவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

சிரியாவில் இருந்து இயங்கும் தீவிரவாத பலஸ்தீனத் தலைவர் அஹமத் ஜிப்ரில், 'சாத்தானின் கவிதைகள்' நூலை எழுதிய ருஷ்டியைத் தான் கொலை செய்யப்போவதாக அறிவித்திருந்தார். (எ)

## ரூ: 2. கோடி நஷ்டஈடு கோருகிறார் ஹெக்டே

பம்பாய், மார்ச் 9

டாக்டர் சுப்பிரமணியசுவாமியிடம் இருந்து 2 கோடி ரூபா மான நட்டஈடு கோரி கர்னுடக மாநில முன்னுள் முதலமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டே நேற்று பம்பாய் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

தன்மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச் சாட்டுக்கள் அனைத்தையும் டாக்டர் சுவாமி ஒரு வாரத்தினுள் வாபஸ் வாங்க வேண்டும்; இல்லையேல் வழக்குநடத்தப்படும். —இப்படி திரு. ஹெக்டே தனது வழக்கில் தெரிவித்திருக்கிறார்.

இருவரும் ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

## இந்திய அமைச்சரின் நேபாள விஜயம்

காத்மண்டு, மார்ச் 9

இந்திய வெளியுறவு அமைச்சர் பி. வி. நரசிம்மராவ் நேபாளத்திற்கு ஐந்து மணித்தியால விஜயம் ஒன்றைமேற் கொண்டார்.

நேபாள வெளியுறவு அமைச்சருடன் அவர் இரண்டு சுற்றுப் பேச்சுக்களை நடத்தினுர்.

நேபாளத்தில் உள்ள பசுபதி நாதர் ஆலயத்திற்கு வழிபடச் செல்வதே தனது விஜயத்தின் முக்கிய நோக்கம் என்று திரு. ராவ் சொன்னுர்.

இருநாடுகளுக்கு இடையே வளர்ந்துவரும் கருத்து வேறுபாடுகள் குறித்துப் பேசவே திரு, ராவ் காத்மண்டு சென்றுர் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (எ)

ஆப்கன் மோதல்

## ஜலலபாத் விமான நிலையம் கெரில்லாக்கள் கையில்?

ஆப்கனிஸ்தானில் உள்ள மாகாணங்களின் தலைநகரங்கள் மீது கெரில்லாக்கள் முழு அளவிலான தாக்குதலை மேற்கொண்டிருக்கின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

ஜலவபாத் நகரில் உள்ள விமான நிலையத்தைக் கைப்பற்றி விட்டதாக முஜாஹிதீன் கெரில்லாக்கள் அறிவித்தனர்.

ஆனுல் காபூல் அரசோ வானொலி மற்றும் டெலிவிஷன் மூலம் விடுத்த அறிக்கையில், கெரில்லாக்களின் சகல தாக்குதல்களும் அரசுப் படைகளினுல் முறியடிக்கப் பட்டு விட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

ஜலலபாத் நகரைச் சுற்றி வளைத்துள்ள 10 ஆயிரத்துக்கான கெரில்லாக்கள் மீது அரசுப்படையினர் கடுமையான தாக்குதலை மேற்கொண்டிருக்கின்றனர் என்றும் கூறப்பட்டது. (எ)

# கல்வி டிப்ளோமாவுக்கு தெரிவாகும் ஆசிரியர்களுக்கு தற்காலிக இடமாற்றம்

## வெளி இடங்களில் இருந்து யாழ் மாவட்டத்துக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ். மாவட்டத்துக்கு வெளியே கடமைபுரியும் ஆசிரியர்களும் இனிமேல் யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வித்தகைமைப் பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

இப்பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படும் வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கு — பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்கு வசதியாக — இரண்டாண்டு காலம் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு தற்காலிக இடமாற்றம் வழங்கப்படும்.

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சு வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

யாழ. பல்கலைக்கழகத்தில், பட்டப்பின்கல்வித்தகைமைப் பயிற்சி நெறியைப் பயிலுவதற்கு பல்கலைக்கத்திலிருந்து 25 மைல் சுற்றுடலுக்குள் இருப்பவர்களுக்கு மட்டுமே வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

இனிமேல் இத்தூரத்திற்கு அப்பால் இருப்போருக்கும் — கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னுர், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தோருக்கும்கூட — இவ்வாய்ப்பு கிடைக்கவிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித்தினம் கடந்த 5 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் வெளிஇட ஆசிரியர்களுக்கு வாய்ப்பளிக்கும் விதத்தில் விண்ணப்ப முடிவு தினம் மார்ச் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருப்பதாக யாழ் பல்கலைக்கழக கல்வித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளியிடங்களிலிருந்து இப்பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவோர் தெரிவை உறுதிப்படுத்தும் கடிதத்தின் பிரதியையும் இணைத்து, இது தொடர்பாக வடக்கு கிழக்கு மாகாண அரசின் கல்வி அமைச்சின் செயலாளருக்கு விண்ணப்பிக்கலாம் என்றும்—

அவர்களுக்கு இப்பயிற்சி நெறிக்காலமான — இரண்டு ஆண்டுகளுக்கு— யாழ்ப்பாண மாவட்டத்துக்கு தற்காலிக இடமாற்றம் வழங்கப்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ஈழத்து நூல்கள் கொள்வனவு: மட்டு. கலாசாரப்பேரவை ஒழுங்கு

ஈழத்தில் வெளியிடப்படும் இலக்கிய சஞ்சிகைகள்உட்பட நூல்களைக்கொள்வனவுசெய்து விநியோகிக்க மட்டக்களப்பு கலாசாரப் பேரவை திட்டமிட்டுள்ளது.

ஈழத்து நூல்களில் 50 பிரதிகளைப் பேரவை கொள்வனவு செய்யும் எனவும் நூல்வெளியீட்டாளர்கள்முதலில் நூலின் 2 பிரதிகளை அனுப்பி அவை அங்கீகரிக்கப்பட்ட பின்னரே மீதி 48 பிரதிகளை அனுப்ப வேண்டும் எனவும் இது பற்றிய பத்திரிகைகளுக்கான செய்தி கூறுகின்றது.

நூல்களை மட்டக்களப்பு உதவி அரசாங்க அதிபர் இராநாகலிங்கத்தின் முகவரிக்கு அனுப்ப வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (க-21)

## பணம் வசூலிப்பு குறித்து எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச். 10

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் பெயரைப் பாவித்து ஆலய உற்சவங்களுக்கும் திருப்பணிகளுக்குமெனச் சிலர் பணம் வசூலிப்பது கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

இம்மோசடியைத் தவிர்ப்பதற்காக திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி தேவஸ்தானம் நிதி உதவி செய்ய விரும்புபவர்களை தம்முடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளனர். (ச)

## தொலைக் கல்வி ஆசிரியர் பயிற்சி

செயல்முறை அமர்வு நாளை 11ஆம் 12ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் வழமைபோல் நடைபெறும்.

பயிற்சி நெறியில் பயிலும் எல்லா ஆசிரியர்களும் சனி ஞாயிறுதினங்களில்பங்குபற்றுமாறுகேட்கப்படுகின்றனர்.

புதிதாக பயிற்சிநெறியில் சேர்வதற்கான விண்ணப்பப் படிவங்களும் அன்றைய தினம் விநியோகிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 1989-03-15 ஆகும்.

புதிதாக நியமனம் பெற்று மூன்று மாதகாலச் சேவையை முடித்துக்கொண்ட ஆரம்ப, கணித விஞ்ஞான ஆசிரியர்கள் இந்நெறிக்கு விண்ணப்பிக்கலாம் என யாழ்ப்பாணப் பிரதேசத் தொலைக் கல்விப்பிரிவு அறிவித்துள்ளது. (ச)

## கொடியேற்றம்

பண்ணுகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயில் வருடாந்த மகோற்சவம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தேர்த்திருவிழா 21 ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா 22ஆம் திகதியும் நடைபெறும். (ச)

## பழிவாங்கும் செயல்கள் கொலைகள் நிறுத்தப்பட வேண்டும்

### மேர்ஜ் அறிக்கை

யாழ்ப்பாணம், மார்10

மிகுந்த நெருக்கடிகளின் மத்தியிலும், அச்சுறுத்தல்கள், பழிவாங்கும் கொலைகள், வன்செயல்கள்போன்ற மனித உரிமைகள் மீறல் மத்தியிலும் மக்கள் உற்சாகத்துடன் சென்று அடக்கு முறைக்கும் வன்செயல்களுக்கும் எதிராக அமைதி, யுத்தநிறுத்தம்கோரி வாக்களித்துள்ளார்கள். பொதுமக்களின் ஜனநாயக வேண்டுகோளைச் செவிமடுத்து அனைத்து இயக்கங்களும் பழிக்குப் பழிவாங்கும் வன்செயல்கள், கொலைகள் ஆகியவற்றில் ஈடுபடாது புரிந்துணர்வுடன் செயற்படவேண்டும்.

இனங்களுக்கிடையில் நீதிக்கும்சமத்துவத்திற்குமானஇயக்கம்(மேர்ஜ்) மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

மாகாணசபைத் தேர்தலுக்குப்பின் பழிவாங்கும் அத்துமீறிய அடக்குமுறைகள் வளர்ந்துகொண்டுவரும் சூழ்நிலையை நிராகரிக்க 15-2-89 நாடாளுமன்றத் தேர்தலை மக்கள் பாவித்துள்ளனர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

நாடாளுமன்றத் தேர்தலுக்குப்பின் பொதுமக்களைப் பழிவாங்கும் நடவடிக்கைகள், கொலைகள், வன்செயல்கள் நிறுத்தப்படவேண்டும்.

உடன் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்குமாறு சகலரையும் வேண்டுகின்றோம்.

சமாதானத்தையும் யுத்த நிறுத்தத்தையும் விரும்பி ஆயுதங்களைக் களைந்து ஜனநாயக வழிக்குத் திரும்பும் பொதுமக்கள், இளைஞர்கள் அனைவரும் சுயமாகச் செயற்பட வழிவிடவேண்டும் என்று அனைவரையும் வேண்டிக் கொள்கின்றோம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சாசனத்தின் 21(1) சரத்தின் பிரகாரம் — ''ஒவ்வொருவருக்கும் தத்தமது நாட்டின் ஆட்சியில் நேரடியாகவோ அல்லது சுதந்திரமான முறையில் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ பங்குபெறுவதற்கு உரிமையுண்டு''.

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலித்துப் பொறுப்புடன் செயல்பட வழிவிடல்வேண்டும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-51)

## பற்றிக்ஸ்....

(4ஆம் பக்க தொடர்ச்சி)

துரித துடுப்பாட்ட வீரர்.

ஏ. ஜஸ்ரின்:- நம்பிக்கைக்குரிய துடுப்பாட்ட வீரர்.

1881ஆம் ஆண்டளவில் வடபிரதேசத்தில் கிரிக்கெட் போட்டி அறிமுகப்படுத்தப் பட்டது.

யாழ். மத்திய கல்லூரியின் அதிபராக இருந்த வண. பிரெடெறிக் எம். வெப்ஸ்ரர் அவர்களே முதல் தடவையாகக் கிரிக்கெட்டை கல்லூரியில் தொடங்கி, யாழ்ப்பாணத்துக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

இந்த விளையாட்டு இன்றைய பொதுசனத்தொடர்புச் சாதனங்களுடன் தொடர்புடையதாகவும் கழக வாழ்க்கை (Club Life) முறையுடன் ஒன்றிணைந்ததாகவும் அமைக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதிலும் வடபிரதேசத்தில் இந்த விளையாட்டுப் பாரம்பரியத்தை வளர்ப்பதிலும், பேணிக்காப்பதிலும் கல்லூரிகளே ஈடுபட்டு வருகின்றன.

இந்த வகையில் யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் ஓர் கணிசமான பங்குண்டு.

இந்த இரு கல்லூரிகளும் தமக்கிடையில் ஒற்றுமையையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதற்கான ஒரு ஊடகமாக கிரிக்கெட் போட்டியை நடத்தி வருகின்றன. (இ- 5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிளகாய்த் தூள்

யாழ்ப்பாண முறைப்படியும் சுகாதார முறைப்படியும் தயாரிக்கப்பட்டு

★ 100 gr பக்கட்
★ 1 kg பக்கட்
★ 2 kg பக்கட் நிறைகளில்

விற்பனையாகின்றது

தொகையாக ஓடர் செய்பவர்களுக்கு

★ விசேட கழிவு உண்டு ★

பெற்றுக் கொள்ள வேண்டிய இடம்:

**அண்ணா கோப்பிக் கடை,**
**யாழ்ப்பாணம்.**



# உதயன்

10 - 03 - 1989 வெள்ளிக்கிழமை



## உழுந்து மா

பப்படம், தோசை, வடை முதலிய தேவைக்கு பாவிக்கக் கூடிய முறையில் சுத்தமாகவும் சுகாதார முறைப்படியும் தயாரிக்கப்பட்டு விற்பனையாகின்றது.

தொகையாக ஓடர் செய்பவர்களுக்கு

★ விசேட கழிவு உண்டு. ★

பெற்றுக்கொள்ள வேண்டிய இடம்:

**அண்ணா கோப்பிக் கடை,**
யாழ்ப்பாணம்.


## இன்று மிருதங்க அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 10 நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று வெள்ளிக்கிழமை சிவத்திரு வ. ராமேஸ்வரனின் மிருதங்க அரங்கேற்றம் இடம்பெறுகின்றது. ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் பிற்பகல் 2-30 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். (அ)


## OPENING OF AGENCY POST OFFICE

## முகவர் அஞ்சல் நிலைய திறப்பு விழா

### இன்று 10-03-1989 (வெள்ளி)

### Gilani Agency Post Office

இல. 19, மணிக்கூட்டுக் கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.

வேலை நேரம்:- காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை

அஞ்சல் நிலையங்களில் பெறும் சகல சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளமுடியும்.

(9978)


போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்
(யாழ் / பெரியாஸ்பத்திரி)

## கேள்வி விளம்பரம்

### சலவை ஒப்பந்தம் - 1989 - 1990

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அழுக்குத்துணிகளை 1989. 04. 01 தொடக்கம் 1990. 03. 31 வரை சலவை செய்வதற்காக கேள்விப்பத்திரங்கள் 1989. 03. 22 ஆம் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள் உரிய பத்திரங்களில் இரு பிரதிகளாக நிரப்பி அனுப்பப்படல் வேண்டும். எனது பெயருக்கு ரூபா 150/- ஐ வைத்தியசாலை காரியாலயத்தில் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் நேரில் ஒப்படைக்கப்பட்டால் ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டு வழங்கப்படும். ஒப்பந்தக்காரர் விரும்பினால் கேள்விப்பத்திரங்களைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம்.

கேள்விப்பத்திரங்களை அவைகள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி முதல்நாள் நண்பகல் 12 மணிக்கு முன்பதாகப் பெற்றுக்கொள்ளவேண்டும். கேள்விகள் என்னால் வழங்கப்படும் அதற்குரிய பத்திரங்களில் இல்லாவிடில் நிராகரிக்கப்படும். முடிவுத் திகதியன்று காலை 10 மணிக்கு பின் வரும் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரர் பிணைப் பணமாக ரூபா 1500/-ஐச் செலுத்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் வேண்டும். ஏற்றுக்கொள்ளப்படாத கேள்விப்பத்திரங்களின் மேல் செலுத்தப்பட்ட ஒப்பந்தம் கைச்சாத்தாகியதும் திரும்பக் கொடுக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் மார்ச் 22 ஆம் திகதி காலை 10 மணிக்கு எனது காரியாலயத்தில் திறக்கப்படும்போது கேள்விதாரர்களோ, அவர்களின் பிரதிநிதிகளோ பிரசன்னமாயிருக்கவும்.

மேலதிக விபரங்களை இவ் வைத்தியசாலையின் கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ். சிவலிங்கம்,**
கணக்காளர்

போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(C/1833)

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டிக்கிரியைகளும்

### திரு. கனகசபை ஆலாலசுந்தரம்

பொலிகண்டியைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், ஆவரங்காலை வசிப்பிடமாகக்கொண்டவரும் காலம் சென்ற இளைப்பாறிய ஆசிரியருமாகிய கனகசபை ஆலாலசுந்தரம் அவர்களின் சபிண்டிக்கிரியைகள் 11-03-89 சனிக்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால். இவ்வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.**

(9812)

## நாவலர் நெடுஞ்செழியன் அரசியல் துறவறம்!

சென்னை, மார்ச் 10
தமிழகத்தில் சுமார் 20 ஆண்டு காலம் அமைச்சராகவும், சில காலம் இடைக்கால முதலமைச்சராகவும் பணிபுரிந்த நாவலர் நெடுஞ்செழியன் அரசியலில் இருந்து ஒதுங்கிவிட்டதாகத் தமிழகச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த தேர்தலில் நால்வர் அணியின் சார்பில் மைலாப்பூர்த் தொகுதியில் போட்டியிட்ட நாவலர் நெடுஞ்செழியன் 600 வாக்குகள் மட்டுமே பெற்று பெரும் தோல்வியடைந்தார் என்பது தெரிந்ததே.

அந்தத் தோல்வியை அடுத்து ஜானகி இராமச்சந்திரனைப் போல் நாவலரும் அரசியல் துறவறம் பூண்டிருப்பதாக அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-9)

## தாய் — சேய் நலனுக்கு ஐந்தாண்டுத் திட்டம்

### மாநகரசபைக்கு யுனிசெவ் உதவும்

யாழ்ப்பாணம், மார்ச் 10
யாழ்ப்பாண நகரில் தாய்-சேய் பராமரிப்பு மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள ''யுனிசெவ்'' நிறுவனம் உதவி செய்யவுள்ளது.

1989 ஆம் ஆண்டு தொடக்கம் 1994 ஆம் ஆண்டுவரையிலான ஐந்து ஆண்டுகளில் நடைமுறைப்படுத்துவதற்கான திட்டமொன்று இதற்கெனத் தயாரிக்கப்பட்டுள்ளது.

''யுனிசெவ்'' நிறுவனம் ஏற்கனவே 1984 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை சுமார் 30 இலட்சம் ரூபாவை யாழ் நகரில் சுகாதார பராமரிப்பு வசதிகளை ஏற்படுத்த செலவு செய்துள்ளது. (அ-5)

## வடக்கு, கிழக்கு மாகாண அமைச்சர் தயான் இராஜினாமா

வடக்கு-கிழக்கு மாகாண அரசில் திட்டமிடல், மனித வள ஆற்றல் மற்றும் இளைஞர் விவகார அமைச்சரான திரு. தயான் ஜயதிலக்க தனது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார்.

திரு. ஜயதிலக்க இது தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத் தலைவர் திரு. கே. பத்மநாபாவுக்கு நீண்ட கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

எனது பதவி விலகலால் மாகாண சபையில் ஏற்படும் வெற்றிடத்தை இலங்கை மக்கள் கட்சியைச் சேர்ந்த ஒருவரைக் கொண்டே நிரப்புங்கள்.

தொடர்ந்தும் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தை ஆதரித்து வருவேன்.

தற்போதைய வடக்கு-கிழக்கு மாகாண அரசை ஒரு காபந்து நிர்வாகமாகவே கருதவேண்டும்.

வடக்குத் தமிழ் மக்களின் உணர்வுகள் முழுமையாகப் பிரதிபலிக்கக் கூடியதற்கு ஏதுவாக மாகாண சபைக்கு இடைக்காலத் தேர்தல் ஒன்றை நடத்துவது குறித்துக் கூடப் பரிசீலிக்க வேண்டும் என்று நான் எண்ணுகிறேன்.

இப்படி அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். (ஒ-எ)

## இந்தியப் படையை.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
துள்ள சகல அரசியல் கட்சிகளாலும் கண்டிக்கப்பட வேண்டிய ஒரு பொதுப்பிரச்சினையாகும்.

அஹிம்சை, மற்றும் சமாதானம் பேணும் அரசு ஆகியவற்றில் நம்பிக்கை வைத்துள்ள எமக்கு இப்படுகொலைகள் ஒரு சவாலாகும்.

சிறு வேறுபாடுகளை மறந்து உயிர், உடைமைகளைப் பாதுகாக்க அரசு தனது சக்திக்கு உட்பட்ட சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

எனது வேண்டுகோளுக்கு இணங்க இந்திய அரசு, அமைதிப்படையை வாபஸ் வாங்கத்தொடங்கி விட்டது.

இலங்கை ஆயுதப்படைகளை நாட்டின் ஏனைய பகுதிகளில் பயன்படுத்தும் தேவை குறையுமானால் இந்திய அமைதிப் படை வாபஸாவதை விரைவுபடுத்த முடியும்.

இதற்கு நாம் எல்லாரும் சேர்ந்து வன்செயல்களில் ஈடுபடுபவர்களை ஜனநாயக நடைமுறையில் சேர்க்க உழைக்க வேண்டும்.

அப்போதுதான் நாட்டை உள் இருந்தும் வெளியில் இருந்தும் பலவீனப்படுத்தும் சக்திகளை முறியடிக்கக் கூடிய பலமான நிலையை நாம்ஏற்படுத்தலாம் இப்படி ஜனாதிபதி தனது கடிதத்தில் மேலும் கூறியிருக்கிறார். (உ-எ)

## 4 ஆயிரம்----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஆங்கில ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கு 43 ஆயிரம் பேர் தோற்றினர். இவர்களுள் 4 ஆயிரம் பேர் மட்டுமே தெரிவு செய்யப்படவுள்ளனர். (உ-9)

## தென்பகுதி---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தன.

இதனிடையில்—

பாதுகாப்புப் படையினர் சுமார் 2ஆயிரம் தீவிரவாத சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.

சில இடங்களில் வீதித் தடைகளை இனந்தெரியாதோர்ஏற்படுத்தினர் இன்னும் சில இடங்களில்ரயில்கள் தாக்கப்பட்டன என்று செய்திகள் தெரிவித்தன. [ஒ-ஐ-20]

## 9 ஆவது---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
விடுதலைக் கூட்டணி எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் கூறியதாவது:-

எதிர்க்கட்சிகளுடன் இணைந்து பொதுவான ஒரு வேட்பாளரைச் சபாநாயகர் பதவிக்கு நிறுத்த ஆளும் கட்சி நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை.

ஆகவே எதிர்க்கட்சிகள் தங்கள் உரிமையை நிலைநாட்டும் நோக்குடன் ஒருவரை சபாநாயகர் தெரிவுக்கு நிறுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது.

இதனால்தான் சிறுபான்மை இனத்தவரான தாங்கள் சபாநாயகர் பதவிக்குப் போட்டியிட்ட போதிலும் தங்களை எதிர்த்து ஒருவரது பெயரை நான் பிரேரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்த நிகழ்வை தாங்கள் ஒரு பொருட்டாக கருதமாட்டீர்கள் என நம்புகிறேன்.

— இப்படி திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

## இந்தியா பின்னணியில்

போர்ட் ஒவ்பெயின், மார்ச் 10
மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் ஆட்டத்தில் இந்திய அணி மிகவும் பின்னணி நிலையில் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நேற்றிரவு இச் செய்தி அச்சுக்குப் போகும்போது இந்திய அணி 48 ஓவர்களில் சகல விக்கெட்டுகளை இழந்து 148 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

ரவிசாஸ்திரி 10, ஸ்ரீகாந் 5, சித்து 12, வெங்சாகர் 7, அஸாருதீன் 19, ராஜேஷ்சர்மா 5, ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். (உ)

## ஒலியின் பாதுகாப்பு அதிகாரி சுட்டுக்கொலை

கொழும்பு, மார்ச் 10
ஐக்கிய சோஷலிச முன்னணியின் தலைவர்களில் ஒருவரான திரு. ஒஸி அபயகுணசேகராவின் பாதுகாப்பு அதிகாரி சப்-இன்ஸ்பெக்டர் பி. ஆர். சோமபால கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். (ஒ-எ)

## உழவு இயந்திரங்கள் பவுசர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 10
யாழ் மாவட்டத்திற்கென இரண்டு டிராக்டர்களும், தண்ணீர் ஏற்றிச் செல்லும் பவுசர்களும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் வழங்கப்பட்டது.

வேலணை பிரதேச சபைக்கும் ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கும் இவை அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கத்தினால் கையளிக்கப்பட்டன. (ஒ)

## கொள்ளை!

கொழும்பு, மார்ச் 10
கேகாலை மாவட்டத்தில் கித்துல்கல எனும் இடத்தில் நேற்று முன்தினம் இரண்டு கிராமிய வங்கிகள் கொள்ளையடிக்கப்பட்டன.

6 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் பணமும் கொள்ளையடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (எ)

## அடையாளம் காணப்பட்டார்

யாழ்ப்பாணம், மார்ச் 10
கொழும்பு, உறுகொடவத்தவில் ரயில் தண்டவாளத்தில் தலையை வைத்துத் தற்கொலை செய்து கொண்டவர் சித்தன்கேணியைச் சேர்ந்த நல்லைநாதன் சிவசுதன் என அடையாளம் காணப்பட்டுள்ளது. (ஒ-9)

## தேசியக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வேண்டும்.

எனது நிர்வாகத்தின் அடிநாதமாக இவை விளங்கும்.

**வறுமை ஒழிப்புத்திட்டம்**

வறுமை ஒழிப்புத்திட்டத்தின் சகல பணிகளும் விரைவில் ஆரம்பமாகும்.

எத்தகைய சீர்குலைவோ தாமதமோ இன்றி இத்திட்டம்மேற்கொள்ளப்படுவதற்கு சகல முயற்சிகளும் எடுக்கப்படும்.

கல்வி முறையிலும் நிர்வாக முறையிலும் பிரிவினையை ஏற்படுத்தக் கூடியதும் சர்ச்சைக்குரியதுமான சில பிரச்சினைகளை நான் நீக்கிவைத்துள்ளேன்.

நாட்டைப் பலப்படுத்த கட்சி பேதங்களை மறந்து ஒன்றுபட்டுச் செயற்படுவோமாக. 1 கோடி 60 லட்சம் மக்களுக்கும் புதுவாழ்வு கொடுப்பதற்காக ஒன்றுபட்டுச் செயற்படுவோமாக.

சிங்கள, தமிழ்த் தீவிரவாதிகளை ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக வழிக்கு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி திரு. பிரேமதாஸா சொன்னார். [அ-எ]

# மரண அறிவித்தல்கள்

### சித்தன்கேணி
## நல்லைநாதன் - சிவசுதன்

சங்கானை உப அரசாங்க அதிபர் அலுவலக உதவியாளர் நடராசா நல்லைநாதனினதும் கமலாதேவியினதும் அருமை மகனும், திரிலோகநாதன், ஜெயலட்சுமி, ஞானலட்சுமி, கஜாதரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வட்டு இந்துக் கல்லூரியின் பழைய மாணவனுமாகிய நல்லைநாதன் - சிவசுதன் அகாலமரணமானார். ஈமக்கிரியைகள் (10 - 03 - 89) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் வழுக்கியவாறு மயானத்துக்கு கொண்டு செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்: **ந. நல்லைநாதன்**

சங்கானை.

(9812)

## தம்பையா கணபதிப்பிள்ளை (நயினாதீவு)

(விவசாய ஆராய்ச்சி நிலையம் கிளிநொச்சி)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழை அம்பனையில் வசிப்பவருமான தம்பையா கணபதிப்பிள்ளை அவர்கள் 09-03-89 அன்று காலமானார். அன்னார் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், பத்மநந்தினி (மருத்துவ பீடம் யாழ் பல்கலைக்கழகம்) பிறைசூடி, மதிசூடி, பவதாரணி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தம்பையா தையலம்மையின் அன்பு மகனும், காலஞ்சென்ற சொக்கலிங்கம் சின்னம்மா ஆகியோரின் மூத்த மகனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-03-89 சனிக்கிழமை காலை நயினாதீவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **மனைவி, பிள்ளைகள்**

நயினை - 3.

(9977)

## திருமதி பொன்னம்பலம் பவளரத்தினம்

திருமதி பொன்னம்பலம் பவளரத்தினம் காலமாகிவிட்டார்.

இவர் காலம் சென்ற மலாயன் பென்சனியர் பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், ராஜேஸ்வரி, ராஜமலர், ராஜசிம்மன் (U.K.), மகேஸ்வரி (U.K.), சரோஜினி, பரமேஸ்வரன்(U.K.),ராஜசிங்கம்(U.S.A.) ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜதுரை, ஆனந்த நடராஜா, கதிரவேலு (U.K.), வெ. யோகேஸ்வரன் (முன்னாள் பா. உ), Dr. சாரதா (U.K.), Dr. ஜோதி (U.K.), ஆன் (U.S.A.) ஆகியோரின் அன்பு மாமியாரும், ரவீந்திரன், சியாமளா, நிரஞ்சளா, ரமணன், சங்கரி, சிவபாலா, சிவராஜசிங்கம் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை (11-03-89) காலை 10.00 மணிக்கு தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**திருமதி ராஜமலர் ஆனந்தநடராசா.**

இல: 5/1, பண்டாரக்குளம் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(9817)

## திரு. சாந்தலிங்கம் சற்குருநாதன்

வேலணை கிழக்கு சிவநிலயத்தைச் சேர்ந்த திரு. சாந்தலிங்கம் சற்குருநாதன் 7-3-89இல் காலமானார். இவர் காலம்சென்ற சாந்தலிங்கம்-அன்னபூரணத்தின் அன்பு மகனும், சண்முகநாதன் (பாரிஸ்), சிவநாதன் (டென்மார்க்), சிவபாக்கியம், அம்பிகாதேவி, சரசலாதேவி (அட்டன் எபொஸ்லி பாடசாலை ஆசிரியை) ஆகியோரின் சகோதரரும், மகேந்திரன் (டென்மார்க்), இராசலிங்கம் (இத்தாலி), கன்னிகாபரமேஸ்வரி (பாரிஸ்) ஆகியோரின் மைத்துனரும், சிவசுப்பிரமணியத்தின் (வட்டயமுல்ல வர்த்தகர்) மருமகனும், சிவப்பிரியாவின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் 11-3-89 சனிக்கிழமை பகல் 2 மணிக்கு சாட்டி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :

**சாந்தலிங்கம்-அன்னபூரணம்**

(9816)

## திருமதி மகேஸ்வரன் விமலாதேவி

இலக்கம் 8 சிறும்பியடி ஒழுங்கையில் வசிக்கும் திரு. செல்லையா மகேஸ்வரனின் (மனோ) அன்பு மனைவி விமலாதேவி 9-3-89 வியாழக்கிழமை காலமானார். இவர் கோண்டாவில் வி. இரத்தினசபாபதி - திருமதி செல்லம்மா இரத்தினசபாபதி ஆகியோரின் அன்பு மகளும், புங்குடுதீவைச் சேர்ந்த காலம்சென்ற கலால் பகுதி உத்தியோகத்தர் க. செல்லையா, திருமதி கமலாட்சி செல்லையா ஆகியோரின் அருமை மருமகளும், சிவனேசன் (U. K.), இந்திராதேவி (இந்தியா), றேணுகாதேவி, ஜெயநேசன் (I.P.T.), றசிதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுலோஜனா (U.K.), குகனேசன் (Canada), விசாகபவன் (Maldives), சுமித்திரா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் சம்பந்தமான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்'

தகவல் :

**ந. இராசதேவன்**

இல. 8, சிறும்பியடி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(9813)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2, இல் உள்ள அச்சகத்தில் 10 - 03 - 1989 இல்அச்சிட்டு வெளியிடப்பட்டது.